பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
24 05 2025 7 15
சனிக்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

- ‘வளர்ச்சியடைந்த பாரதம், வளர்ச்சியடைந்த மாநிலங்கள்’ என்ற மையப் பொருளுடன் நிதி ஆயோக்கின் 10வது கூட்டம் பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில் புதுதில்லியில் இன்று நடைபெற உள்ளது.

- நாடு முழுவதும் விமானப் போக்குவரத்துத் துறையில் மிகப்பெரிய கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டு வருவதாக மத்திய சிவில் விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. ராம்மோகன் நாயுடு தெரிவித்துள்ளார்.

- பாகிஸ்தானில் பதிவு செய்யப்பட்ட விமானங்கள் இந்திய வான் எல்லையில் பறப்பதற்கு விதிக்கப்பட்ட தடையை மத்திய அரசு அடுத்த மாதம் 23ஆம் தேதி வரை நீட்டித்துள்ளது.

- சிங்கப்பூரில் பிரதமர் திரு. லாரன்ஸ் ஓங் தலைமையில் புதிய அரசு பதவியேற்றுள்ளது.

- மலேசியா மாஸ்டர்ஸ் சர்வதேச பேட்மிண்டன் ஆடவர் ஒற்றையர் பிரிவு அரையிறுதியில் இந்தியாவின் கிடாம்பி ஸ்ரீகாந்த், இன்று ஜப்பானின் Yushi Tanaka-ஐ எதிர்கொள்கிறார்.

*--- இனி விரிவான செய்திகள் ---*

<<<<>>>>

நிதி ஆயோக்கின் 10வது நிர்வாகக் குழுக் கூட்டம் பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில் புதுதில்லியில் இன்று நடைபெற உள்ளது.

பாரத் மண்டபத்தில் நடைபெற உள்ள இந்தக் கூட்டத்தில் மாநில மற்றும் யூனியன்பிரதேசங்களின் முதலமைச்சர்கள், துணைநிலை ஆளுநர்கள், மத்திய அமைச்சர்கள், நிதி ஆயோக் உறுப்பினர்கள் கலந்துகொள்கிறார்கள்.

‘2047-ல் வளர்ந்த பாரதம், வளர்ந்த மாநிலங்கள்’ என்ற கருப்பொருளில் இந்த ஆண்டுக்கான கூட்டம் நடைபெற உள்ளது.

இரண்டாவது மற்றும் மூன்றாம் நிலை நகரங்களில் உற்பத்தி மற்றும் சேவைத் துறையில் கவனம் செலுத்துதல், சிறு குறு நடுத்தர தொழில் நிறுவனங்களின் வளர்ச்சியில் கவனம் செலுத்துதல், பசுமைப் பொருளாதாரம் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை அதிகரிப்பது தொடர்பாகவும் இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட உள்ளது.

<<<<>>>>

நாடு முழுவதும் விமானப் போக்குவரத்துத் துறையில் மிகப்பெரிய கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டு வருவதாக மத்திய சிவில் விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. ராம்மோகன் நாயுடு தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று வருங்காலத்திற்கான இந்திய சிவில் விமானப் போக்குவரத்துத் துறையின் மேம்பாட்டுத் திட்டங்கள் குறித்த அறிக்கையை வெளியிட்டுப் பேசிய அவர், விமானங்களை தயாரித்தல், பராமரித்தல் உள்ளிட்ட பணிகள் உள்நாட்டிலேயே மிகப்பெரிய அளவில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதாகக் கூறினார்.

சிவில் விமானங்களை இயக்கும்போது பாதுகாப்புடன் இயக்குவதற்கான நடைமுறைகளை இந்தியா மேம்படுத்தி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

சர்வதேச அளவில் விமானப் போக்குவரத்தில் உள்ள வாய்ப்புகள் அனைத்தையும் இந்தியா சரியாக பயன்படுத்திக்கொள்ளும் என்றும் அவர் கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் பேசிய மத்திய விமானப் போக்குவரத்துத்துறை இணையமைச்சர் திரு. முரளிதர் மொஹூல், இந்தியாவின் சிவில் விமானப் போக்குவரத்துத் துறையின் வளர்ச்சியில் மத்திய அரசு மட்டுமல்ல, மாநிலங்களின் பங்கும் குறிப்பிடத்தக்க அளவு உள்ளது என்று கூறினார்.

மாநிலங்களுக்குள் பல்வேறு நகரங்களை விமானப் போக்குவரத்து மூலம் இணைப்பதற்கு மாநில அரசுகள் மிகுந்த ஆர்வம் காட்டுவதாகவும் அவர் தெரிவித்தார்.

உடான் திட்டத்தின்கீழ் இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை நகரங்கள் விமானப் போக்குவரத்து சேவையில் இணைக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

<<<<>>>>

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை குறித்தும், தீவிரவாதிகளுக்கு பாகிஸ்தான் புகலிடம் அளித்து வருவது குறித்தும் பல்வேறு நாடுகளுக்கு எடுத்துக்கூற அமைக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற அனைத்துக் கட்சிக் குழுவினருடன் நேற்று புதுதில்லியில் வெளியுறவுத்துறை செயலர் திரு. விக்ரம் மிஸ்ரி கலந்துரையாடினார்.

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையை அவர்களுக்கு விளக்கி கூறிய அவர், பயங்கரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் நிலைப்பாட்டை உலக நாடுகளுக்கு எடுத்துரைக்குமாறு கேட்டுக்கொண்டார்.

இந்தக் கூட்டத்தில் காங்கிரஸ் மூத்த தலைவர் திரு. சசிதரூர், பிஜேபி மூத்த தலைவர் திரு. ரவிசங்கர் பிரசாத், தேசியவாத காங்கிரஸ் சரத்பவார் பிரிவின் நாடாளுமன்ற குழுத் தலைவர் திருமதி சுப்ரியா சுலே உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்திற்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய திரு. சசிதரூர், 1989ஆம் ஆண்டு முதல் எல்லைக்கு அப்பாலில் இருந்து தூண்டிவிடப்படும் பயங்கரவாதத்தால் இந்தியா அனுபவித்து வரும் மிக மோசமான நிலை குறித்து பல்வேறு நாடுகளிடம் விளக்கப்படும் என்று கூறினார்.

பயங்கரவாதத்திற்கு எதிராக இந்தியா மேற்கொண்டு நடவடிக்கை மற்றும் எதிர்காலத்தில் பயங்கரவாத தாக்குதல்களை எவ்வாறு கையாள்வது என்பது குறித்து தமது தலைமையிலான பிரதிநிதிகள் குழு விளக்க உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

வெளியுறவுத்துறை செயலரின் விளக்கம் திருப்திகரமாகவும், பயனுள்ளதாகவும் இருந்தது என்று இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட பிஜேபி மூத்த தலைவர் திரு. பைஜெயந்த் பாண்டா கூறினார்.

இந்தியா மேற்கொண்ட ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கைக்கு நாடு முழுவதும் மக்களிடையே காணப்பட்ட ஆதரவையும் வெளிநாடுகளுக்கு விளக்க உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

<<<<>>>>

பாகிஸ்தானில் பதிவு செய்யப்பட்ட விமானங்கள் இந்திய வான் எல்லையில் பறப்பதற்கு விதிக்கப்பட்ட தடையை மத்திய அரசு அடுத்த மாதம் 23ஆம் தேதி வரை நீட்டித்துள்ளது.

பாகிஸ்தானில் பதிவு செய்யப்பட்டு அந்நாட்டில் இருந்து இயக்கப்பட்டு வரும் விமானங்களும், பாகிஸ்தானில் குத்தகை முறையில் இயக்கப்பட்டு வரும் விமானங்களும், ராணுவ விமானங்களும்

இந்தியாவின் வான் எல்லையில் பறக்க அனுமதிக்கப்படமாட்டாது என்று புதுதில்லியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய சிவில் விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. ராம்மோகன் நாயுடு கூறினார்.

<<<<>>>>

வரவிருக்கும் கரீப் பருவத்திற்கு தேவையான உரம் தடையின்றி கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மத்திய ரசாயனம் மற்றும் உரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று முக்கியமான உர நிறுவனங்களின் தலைவர்களுடன் ர வினியோக நடைமுறைகளை வலுப்படுத்துதல், உற்பத்தி திறனை மேம்படுத்துதல், விவசாயிகளுக்கு தரமான மற்றும் கட்டுப்படியான விலையில் உரம் கிடைப்பதை உறுதி செய்ய தேவையான வழிமுறைகள் குறித்து அவர் ஆலோசனை நடத்தினார்.

உரம் இருப்பு மற்றும் வினியோகத்தில் முன்னெச்சரிகை மற்றும் ஒருங்கிணைந்த திட்டமிடல் மூலம் விவசாயிகளுக்கு தடையின்றி கிடைப்பதை உறுதி செய்யுமாறும் உர நிறுவனங்களுக்கு அவர் அறிவுறுத்தினார்.

வேளாண்துறையின் வளர்ச்சிக்கு மத்திய அரசு மிகுந்த முன்னுரிமை அளிப்பதாகவும் திரு. நட்டா கூறினார்.

<<<<>>>>

கோவா மாநிலத்தில் சுற்றுலா மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்களுக்கு மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரி நேற்று அடிக்கல் நாட்டினார்.

புதிய ஜுவாரி பாலத்தின் மேல் 270 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட உள்ள பார்வையாளர் கோபுரங்களுக்கு அவர் அடிக்கல் நாட்டினார்.

வடிவமைத்தல், கட்டுதல், இயக்குதல் மற்றும் பரிமாற்றம் செய்தல் என்ற மாதிரியின் கீழ் இந்த திட்டம் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் கூறினார்.

இந்த திட்டத்தின்கீழ் பாரீசில் உள்ள ஈஃபிள் கோபுரம் போல் இரட்டடை கோபுரங்கள் கோவாவில் நிறுவப்படும் என்றும், ஒவ்வொன்றும் 125 மீட்டர் உயரம் கொண்டதாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த கோபுரத்தின் மேல் சுழலும் உணவகம், கலைக்கூடம் மற்றும் ஒலி-ஒளி காட்சிகள் மூலம் கோவாவின் கலாச்சார பாரம்பரியம் மற்றும் விடுதலை வரலாற்றை வெளிப்படுத்தும் காட்சியகம் அமைக்கப்படும் என்றும் திரு. நிதின் கட்கரி கூறினார்.

<<<<>>>>

சிங்கப்பூரில் பிரதமர் திரு. லாரன்ஸ் ஒங் தலைமையில் புதிய அரசு பதவியேற்றுள்ளது.

சமீபத்தில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஆளும் மக்கள் செயல் கட்சி மீண்டும் வெற்றி பெற்றது.

இதையடுத்து நேற்று புதிய அரசு பதவியேற்றது.

மாற்றியமைக்கப்பட்ட அமைச்சரவையில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த திரு. சண்முகம் உள்துறை அமைச்சராக தொடர்ந்து நீடிக்கிறார்.

அவர், தற்போது தேசிய பாதுகாப்புக்கான ஒருங்கிணைப்பு அமைச்சராகவும் உள்ளார்.

மேலும் பல இந்திய வம்சாவளியினர் முக்கியமான துறைகளில் அமைச்சர்களாக நீடிக்கிறார்கள்.

திரு. விவியன் பாலகிருஷ்ணன் வெளியுறவுத்துறை அமைச்சராகவும், திருமதி இந்திராணி ராஜா, பிரதமர் அலுவலக அமைச்சராகவும் நீடிக்கிறார்கள்.

திரு. முரளிபிள்ளை சட்டம் மற்றும் போக்குவரத்துத்துறை மூத்த துணை அமைச்சராக பதவி உயர்வு பெற்றுள்ளார்.

சமீபத்தில் நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் ஆளும் மக்கள் செயல் கட்சி மொத்தமுள்ள 97 இடங்களில் 87 இடங்களில் வெற்றி பெற்றது.

<<<<>>>>

ஈரானும், அமெரிக்காவும் ரோமில் நேற்று அணுசக்தி தொடர்பான ஐந்தாவது சுற்றுப் பேச்சுவார்த்தையை நிறைவு செய்துள்ளன.

ஆனால் இந்தப் பேச்சுவார்த்தையில் எந்த முடிவும் எட்டப்படவில்லை என்று அமெரிக்க அரசின் சார்பில் கலந்துகொண்ட மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பேச்சுவார்த்தைக்கான தேவைகள் நீடிப்பதாகவும், மீண்டும் இரு தரப்பினரும் சந்திக்க ஒப்புக்கொண்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதுவரை நடைபெற்றுள்ள பேச்சுவார்த்தை ஆக்கப்பூர்வமானதாக அமைந்தது என்றும், முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அமெரிக்காவுடன் நடைபெற்று வரும் அணுசக்தி தொடர்பான பேச்சுவார்த்தை இரண்டு, மூன்று சந்திப்புகளில் தீர்க்க முடியாத அளவிற்கு சிக்கலானவை என்று இந்தப் பேச்சுவார்த்தையில் கலந்துகொண்ட ஈரான் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. அப்பாஸ் கூறினார்.

<<<<>>>>

மலேசியா மாஸ்டர்ஸ் சர்வதேச பேட்மிண்டன் ஆடவர் ஒற்றையர் பிரிவு அரையிறுதியில் இந்தியாவின் கிடாம்பி ஸ்ரீகாந்த், இன்று ஜப்பானின் Yushi Tanaka-ஐ எதிர்கொள்கிறார்.

இந்தப் போட்டி இந்திய நேரப்படி இன்று காலை மணி 10.10க்கு நடைபெற உள்ளது.

------------

சர்வதேச ஈட்டி எறிதல் போட்டியில் இந்தியாவின் நீரஜ் சோப்ரா வெள்ளிப் பதக்கம் வென்றுள்ளார்.

போலந்தின் Chorzow–வில் நடைபெற்ற சவாலான போட்டியில் ஆறாவது மற்றும் இறுதி முயற்சியில் 84 புள்ளி ஒன்று நான்கு மீட்டர் தூரம் ஈட்டி எறிந்தார்.

ஜெர்மனியின் ஜூலியன் வெபர் 86 புள்ளி ஒன்று இரண்டு மீட்டர் தூரம் ஈட்டி எறிந்து தங்கப் பதக்கத்தையும், கிரனடாவின் ஆண்டர்சன் பீட்டர்ஸ் 83 புள்ளி இரண்டு நான்கு மீட்டர் தூரம் எறிந்து மூன்றாம் இடத்தையும் பிடித்தனர்.

செக்குடியரசில் அடுத்த மாதம் 24ஆம் தேதி நடைபெற உள்ள மற்றொரு சர்வதேச ஈட்டி எறிதல் போட்டியிலும் நீரஜ் சோப்ரா பங்கேற்கிறார்.

ஐபி.எல். கிரிக்கெட் போட்டியில் ஹைதராபாத் அணி 42 ரன் வித்தியாசத்தில் பெங்களூரு அணியை வென்றது.

லக்னோவில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் முதலில் விளையாடிய ஹைதராபாத் அணி 20 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 231 ரன் எடுத்தது.

232 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் விளையாடிய பெங்களூரு அணி 19 புள்ளி 5 ஓவரில் 189 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

ஜெய்ப்பூரில் இன்று மாலை மணி 7.30க்கு நடைபெற உள்ள மற்றொரு ஆட்டத்தில் தில்லி அணி – பஞ்சாப் அணியை எதிர்கொள்ள உள்ளது.

<<<<The End>>>>